இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 177 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 24 – சனிக்கிழமை 07 பிப்ரவரி 2026 – சென்னை 24 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 177 : Thiruvalluvar Year - 2057 - Thai 24 - Saturday 07 February 2026 - Chennai 24 + 8 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று (6.2.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் 85 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், கழகப் பொருளாளர், மக்களவைக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள் எ.வ. வேலு, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர் பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, கே. சுப்பராயன் எம்.பி., கூட்டணிக் கட்சித் தலைவர்கள் வைகோ, தொல். திருமாவளவன், கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., மு. வீரபாண்டியன், பெ. சண்முகம், கே. பாலகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், நாகை மாலி, பிரபாகரராஜா, மு. பாபு, முகமது ஷா நவாஸ், துணை மேயர் மு. மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிர்வாகிகள், தமிழ் வளர்ச்சி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் – புரட்சிகர தத்துவ ஞானி

# மாமேதை கார்ல்மார்க்ஸ் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து மரியாதை செலுத்தினார் !

**சென்னை, பிப்.7-**

**மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் ரூ.85.80 இலட்சம் செலவில் நிறுவப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று (6.2.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் 85 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

**தியாகிகள், மேதைகளுக்கு மரியாதை செலுத்தும் அரசு!**

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டி வளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப் படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும்வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள்ஆகியவைஅமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நேற்று (6.2.2026) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலை சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் 85 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்டு, அச்சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்கள் ஒரு ஜெர்மானிய தத்துவஞானி, புரட்சிகர, பொருளாதார நிபுணர் மற்றும் வரலாற்றாசிரியர் ஆவார்.

1841இல் பட்டம் பெற்ற மாமேதை கார்ல் மார்க்ஸ், சில காலம் இதழியல் துறையில் பணிபுரிந்தார். தீவிர அரசியல் கருத்துகளின் விளைவாக ஜெர்மனியை விட்டு வெளியேறி பாரிசு நகரம் சென்றார். 1847இல் தத்துவத்தின் வறுமை (The Poverty of Philosophy) என்னும் முதல் நூலை வெளியிட்டார்.

**கார்ல் மார்க்ஸின் சித்தாந்தங்கள், இன்றும் உயிர்ப்புடன் இருப்பவை!**

மாமேதை கார்ல் மார்க்ஸின் மார்க்ஸிய கோட்பாடுகள் இந்த மண்ணுலகில் மனிதர்கள் மனிதர்களாய் வாழ்வதற்கு வழிகாட்ட முனையும் ஒரு தத்துவக் கோட்பாடு ஆகும் எனக் கூறியுள்ளார். "என்றும் நினைவில் கொள், ஒரு மனிதனாகப் பிறந்தவன் பயனின்றி அழியக் கூடாது" என்று கூறிய மாமேதை கார்ல் மார்க்ஸின் சித்தாந்தங்கள், இன்று வரை உயிர்ப்புடன் இருக்கின்றன.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

**மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை திறப்பு : சிவந்தது சென்னை!**

**"இழப்பதற்கு அடிமைச் சங்கிலிகளைத் தவிர ஒன்றுமில்லை. அடைவதற்கோ பொன்னுலகம் காத்திருக்கிறது" என உலகத் தொழிலாளர்களை ஒன்றுதிரட்டிய பொதுவுடைமைத் தத்துவத்தின் பிதாமகன் கார்ல் மார்க்ஸ் சிலை கன்னிமாரா பொதுநூலக வளாகத்தில் நிலைகொண்டது!**

**நல்லவை எங்கிருந்து வந்தாலும் வணங்கி ஏற்றுக்கொள்வோம்! அல்லவை ஆதிக்கம் செலுத்தப் பார்த்தால் தடுத்து நிறுத்துவோம். இதுதான் 'திராவிட மாடல்!"**

**- வலைதளப் பதிவில்**
**முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்**

# இன்று விருதுநகரில் சந்திப்போம்! வெல்வோம் ஒன்றாக!

## இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நிகழ்ச்சி ! கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**சென்னை, பிப். 7-**

**கழகத் தலைவரும் -முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (பிப்ரவரி 7) விருதுநகரில் நடைபெறும் கழக இளைஞரணியின் தென் மண்டல நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டத்தையொட்டி, சமூக வலைதளங்களில் நேற்று (06-02-2026) காணொலி ஒன்றினை வெளியிட்டார்.**

அக்காணொலியில் கழகத் தலைவர் அவர்கள் ஆற்றியுள்ள உரை வருமாறு:-



வணக்கம்! இந்த வீடியோ எதற்காக என்றால், விருதுநகரில் நடக்கும் தென் மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கும் இளைஞர்களுக்காக!

1980 இல், நாங்கள் இளைஞர்களாக இருந்தபோது தொடங்கப்பட்ட அணி, இளைஞரணி! 1949 இல் இளைஞர்களால் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இந்தப் பேரியக்கத்தின் அடுத்த தலைமுறையாக – மீண்டும் இளைஞர்களிடம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கொண்டு சேர்க்க – இந்த அணியைத் தொடங்கினோம்!

அன்றைக்கு என்னுடன் களத்தில் நின்று கழகத்தை வளர்த்த இளைஞர்கள்தான், இன்றைக்கு உங்கள் முன்னால், அமைச்சர்களாக – எம்.எல்.ஏ.க்களாக – எம்.பி.க்களாக – மாவட்டக் கழகச் செயலாளர்களாக பல்வேறு பொறுப்புகளில் இருக்கிறார்கள்!

எங்களுக்கு அடுத்தபடியாக, இப்போது, இந்த இயக்கத்தை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியை – அந்தக் கடமையை – தம்பி உதயநிதி அவர்கள் சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது, எப்போதும் வன்மத்தோடு இருக்கும் எதிரிகள் என்ன கட்டமைத்தார்கள்? இளைஞர்கள் இனி தி.மு.க.விற்கு வருவார்களா என்று சந்தேகம்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்

